

# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## மானியக் கோரிக்கை எண்.34

## அறிவிப்புகள்
## 2012-2013

## 1. 2012–13 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள குடிநீர்த் திட்டங்கள்

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,** 2011–2012 ஆம் ஆண்டில் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 8 குடிநீர்த் திட்டங்களின் ஆய்வுப்பணிகள் முடிக்கப்பெற்று கடலூர், விழுப்புரம், புதுக்கோட்டை, தேனி, சிவகங்கை, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைச் சார்ந்த 5 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள், 63 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 8,134 குடியிருப்புகளிலுள்ள 44.36 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், ரூபாய் 1,527.63 கோடி மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டங்கள், 2012–13 ஆம் ஆண்டில் உரிய நிதி ஆதாரத்துடன் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

- தேனி–அல்லிநகரம் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்
- கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களைச் சார்ந்த கடலூர், விருத்தாச்சலம், விழுப்புரம் மற்றும் திண்டிவனம் நகராட்சிகள், 13 பேரூராட்சிகள்

மற்றும் 26 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 3,593 ஊரகக் குடியிருப்புகளுக்கான, கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்டங்களில் 14 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 3,642 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த வல்லம் பேரூராட்சிக்கான காவிரி மற்றும் கொள்ளிடம் ஆறுகளை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- கோயம்புத்தூர் மாவட்டம், ஜமீன் ஊத்துக்குளி பேரூராட்சி மற்றும் பொள்ளாச்சி வடக்கு, தெற்கு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 63 ஊரகக் குடியிருப்புகளுக்கான ஆழியாறு ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் மற்றும் உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 158 ஊரகக் குடியிருப்புகளுக்கான திருமூர்த்தி அணையினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி (பகுதி), கீழப்பாவூர், ஆலங்குளம், மானூர், மேலநீலிதநல்லூர், சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 147 ஊரகக் குடியிருப்புகளுக்கான தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் பேரூராட்சி, பாப்பாக்குடி (பகுதி), கடையம் மற்றும் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 163 ஊரகக் குடியிருப்புகளுக்கான தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி பேரூராட்சி மற்றும் 12 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 368 ஊரகக் குடியிருப்புகளுக்கான, தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

## 2. ஊரணிகளை குடிநீர் ஆதாரங்களாக மாற்றும் திட்டம்

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,** இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் 230 ஊரணிகளை ரூபாய் 15.88 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகள் தேசிய ஊரக குடிநீர்த் திட்டத்தின் (NRDWP) கீழ் நடப்பு நிதியாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## 3. 2012–13 ஆம் ஆண்டில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,** 2012–13 ஆம் நிதியாண்டில் 6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

- கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூர், பூலுவபட்டி, தென்கரை, வேடப்பட்டி, தாளியூர், ஆலாந்துறை, பேரூர் ஆகிய 7 பேரூராட்சிகள் மற்றும் தொண்டாமுத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 134 குடியிருப்புகள் பவானி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு, சுமார் 1.55 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- திருப்பூர் மாவட்டத்தைச் சார்ந்த வெள்ளக்கோயில், மூலனூர், தாராபுரம், குண்டடம் மற்றும் காங்கேயம் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்த சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் உள்ள 1,262 ஊரகக் குடியிருப்புகளுக்கு காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, சுமார் 2.84 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- சேலம் மாவட்டத்தைச் சார்ந்த எடப்பாடி, கொங்கணாபுரம் மற்றும் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 327 ஊரகக் குடியிருப்புகளுக்கு காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு சுமார் 92,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த பேராவூரணி, பெருமகளூர், அதிராம்பட்டினம் பேரூராட்சிகள் மற்றும் பட்டுக்கோட்டை, சேதுபாவாசத்திரம், பேராவூரணி, மதுக்கூர், பாபநாசம், திருவையாறு, தஞ்சாவூர், ஒரத்தநாடு, திருவோணம் ஆகிய 9 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 1,153 ஊரகக் குடியிருப்புகளுக்கு கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, சுமார் 7 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த அந்தநல்லூர், மணிகண்டம், மணப்பாறை ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 303 ஊரகக் குடியிருப்புகளுக்கு காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, சுமார் 1.55 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

- திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள ஆத்தூர், நிலக்கோட்டை, வத்தலக்குண்டு, சாணார்பட்டி, நத்தம், ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி, வடமதுரை, வேடசந்தூர், குஜிலியம்பாறை, திண்டுக்கல், ரெட்டியார்சத்திரம் மற்றும் பழனி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 1,062 குடியிருப்புகளுக்கு காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, சுமார் 5.18 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

## 4. மனிதவள மேம்பாடு

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நடப்பு நிதியாண்டில் 44.36 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் ரூபாய் 1,527.63 கோடி மதிப்பீட்டிலான 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை விரைந்து செயல்படுத்திடவும், 17.94 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகளை முடுக்கி விடவும் ஏதுவாக, **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,** 2012–13ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 69 உதவிப் பொறியாளர்கள் மற்றும் 73 இளநிலை வரைவு அலுவலர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

## 5. புதிய சீருந்துகள் மற்றும் ஜீப்புகள் வழங்குதல்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நடப்பு நிதியாண்டில் 7,000 ஊரக குடியிருப்புகளுக்கான குடிநீர்த் திட்டங்கள், 8 மாபெரும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் 67 நகரக பாதாள சாக்கடைத் திட்டங்கள் உள்ளிட்ட பல திட்டங்களை செயல்படுத்தவுள்ளது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் இத்திட்டங்களை சீரிய முறையில் கண்காணித்து விரைந்து முடிக்க ஏதுவாக, **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,** தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியியல் பணியாளர்களுக்கு 5 புதிய சீருந்துகள் மற்றும் 25 புதிய ஜீப்புகள் வழங்கப்படும்.